**OS. 98/2022**

**நாள். 24.03.2026**

**வா.சா. 1 – ஜோசப் விஜயராணி**

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாககல் செய்துள்ளேன் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. அம்மா மற்றும் அப்பா பெயரில் உள்ள சொத்துக்களுக்கு பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள சொத்துக்களுக்கு நான்குமால்கள் தெரியுமா என்றால் தெரியாது. என் உடன் பிறந்தவர்கள் 2 ஆண்கள். அவர்கள் பிரதிவாதிகள். எனக்கு 1984ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எங்கு நடைபெற்றது என்றால் சென்னையில். என் திருமணத்தின்போது எனக்கு வயது 21. நான் திருமணமான காலம் முதல் சென்னையில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என் அம்மா எப்போது இறந்தார் என்றால் 1999ம் ஆண்டு. எங்கு இறந்தார் என்றால் ஓரிக்கோட்டை கிராமத்தில். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 2020ம் ஆண்டு. அப்பா எங்கு இறந்தார் என்றால் ஓரிக்கோட்டை கிராமத்தில். என் அம்மா பெயரில் எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது, அப்பா பெயரில் எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்று ஞாபகமில்லை. என் தகப்பனார் எனக்கு எதிராக திருவாடானை நீதிமன்றத்தில் O.S.63/2009 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. என் அப்பா O.S.63/2009 என்ற வழக்கை எனக்கு எதிராக தாக்கல் செய்து அந்த வழக்கில் அவருக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது, நீதிமன்றத்திலிருந்து எனக்கு அறிவிப்பும் வரவில்லை. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.